# TNPSC GROUP IIA MAIN 2026
## TEST II – SCIENCE, POLITY, GEOGRAPHY, THIRUKURAL, REASONING

1. Choose the correct statement
   I. LMS – Learning Management System
   II. ERP – Enterprise Revenue Planning
   III. Development of LMS and ERP software and cloud hosting will be executed by ELCOT.

   a. I, II, III    b. II, III only    c. I, II only
   d. I only    e. Answer not known

   பின்வருவனவற்றில் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   I. LMS - கற்றல் மேலாண்மை அமைப்பு
   II. ERP - நிறுவன வருவாய் திட்டமிடல்
   III. LMS மற்றும் ERP மென்பொருள் மேம்பாடு மற்றும் கிளவுட் ஹோஸ்டிங் ஆகியவை எல்காட் மூலம் செயல்படுத்தப்படும்.

   a. I, II, III    b. II, III மட்டும்    c. I, II மட்டும்
   d. I மட்டும்    e. விடை தெரியவில்லை

2. Match the following
   பின்வருவனவற்றை பொருத்துக:

   A. ELCOT — 1. 2007
   B. TNEGA — 2. 1977
   C. TANFINET — 3. 2001
   D. Tamilnadu Virtual Academy (தமிழ்நாடு மெய்நிகர் அகாடமி) — 4. 2018

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 4 | 3 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 2 | 4 | 3 | 1 |
| d. | 2 | 1 | 3 | 4 |

3. How many pairs are correct.
   i. TNSWAN - Tamilnadu State Wide Area Network
   ii. TNSDC - Tamilnadu State Disaster Centre
   iii. TACTV - Tamilnadu Arasu Cable TV Corporation
   iv. ELCOT - e-governance Corporation of Tamilnadu

a. One pair　　b. Two pairs　　c. Three pairs
d. Four pairs　　e. Answer not known

எத்தனை இணைகள் சரியானவை.

i. TNSWAN - தமிழ்நாடு மாநில அளவிலான பகுதி நெட்வொர்க்
ii. TNSDC - தமிழ்நாடு மாநில பேரிடர் மையம்
iii. TACTV - தமிழ்நாடு அரசு கேபிள் தொலைக்காட்சி நிறுவனம்
iv. ELCOT - தமிழ்நாடு மின் ஆளுமைக் கழகம்

a. ஒரு இணை　　b. இரண்டு இணை　　c. மூன்று இணை
d. நான்கு இணைகள்　　e. விடை தெரியவில்லை

4. Which of the following is correct?
   i. ELCOT established in 1987
   ii. Main objective to promote, establish public sector enterprises for electronic items.
   iii. ELCOT is the nodal agency for information and communication technology projects in Tamilnadu.

a. All are correct　　b. i, ii correct　　c. i, iii correct
d. ii, iii correct　　e. Answer not known

பின்வருவனவற்றில் எது சரியானது?

i. ELCOT 1987 இல் நிறுவப்பட்டது
ii. மின்னணுப் பொருட்களுக்கான பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்குவதையும் ஊக்குவிப்பதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டது.
iii. ELCOT என்பது தமிழ்நாட்டின் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப திட்டங்களுக்கான நோடல் ஏஜென்சி ஆகும்.

a. அனைத்தும் சரியானவை　　b. i, ii சரியானவை　　c. i, iii சரியானவை
d. ii, iii சரியானவை　　e. விடை தெரியவில்லை

5. Which of the following is/are true about e-Munnetram application?
   i. It is used to monitor the physical and financial progress of large value infra projects
   ii. It won e-governance silver award 2022.

a. i only　　b. ii only　　c. Both i and ii
d. Neither i and ii　　e. Answer not known

e-முன்னேற்றம் செயலி குறித்து பின்வருவனவற்றில் எது சரியானது/வை?

i. இது பெரிய மதிப்பு உள்கட்டமைப்பு திட்டங்களின் உடல் மற்றும் நிதி முன்னேற்றத்தைக் கண்காணிக்கப் பயன்படுகிறது
ii. இது மின் ஆளுமை வெள்ளி விருது 2022-ஐ வென்றது.

a. i மட்டும்　　b. ii மட்டும்　　c. i மற்றும் ii இரண்டும்
d. i மற்றும் ii இரண்டும் அல்ல　　e. விடை தெரியவில்லை

6. Three pillars of Cyber Security Architecture for Tamilnadu (CSA-TN).
a. People, process, progress
b. People, process, technology
c. People, progress, investigate
d. People, progress, technology
e. Answer not known

தமிழ்நாட்டிற்கான இணைய பாதுகாப்பு கட்டிடமைப்பின் மூன்று தூண்கள் (CSA-TN).
a. மக்கள், செயல்முறை, முன்னேற்றம்
b. மக்கள், செயல்முறை, தொழில்நுட்பம்
c. மக்கள், முன்னேற்றம், ஆராய்ச்சி
d. மக்கள், முன்னேற்றம், தொழில்நுட்பம்
e. விடை தெரியவில்லை

7. Which of the following is/are true about Tamilnadu cloud computing services?
i. Called as "Thamizh Megam"
ii. It is a state cloud infrastructure
iii. Offers infrastructure-as-a service only.
iv. Offers platform-as-a service only
a. (i) and (iii)
b. (i), (ii), (iii)
c. (i), (ii), (iv)
d. (i) and (ii)
e. Answer not known

தமிழ்நாடு மேகக்கணினிய சேவைகள் குறித்த பின்வருவனவற்றில் எது/எவை சரியானது?
i. "தமிழ் மேகம்" என்று அழைக்கப்படுகிறது
ii. இது ஒரு மாநில கிளவுட் உள்கட்டமைப்பு
iii. உள்கட்டமைப்பு சேவையை மட்டும் வழங்குகிறது.
iv. இயங்கு தள சேவையை மட்டும் வழங்குகிறது
a. (i) மற்றும் (iii)
b. (i),(ii),(iii)
c. (i),(ii),(iv)
d. (i) மற்றும் (ii)
e. விடை தெரியவில்லை

8. Which of the following is the nodal agency for the implementation of GIS for the entire Tamil Nadu?
a. Tamil Nadu Geographical Information System
b. Tamil Nadu e-Governance Agency
c. Centre of Excellence in Emerging Technologies
d. State Data Centre
e. Answer not known

தமிழ்நாடு முழுமைக்கும் GIS தொழில்நுட்பத்தை அமல்படுத்துவதற்கான முதன்மை நிறுவனம் எது?
a. தமிழ்நாடு புவியியல் தகவல் அமைப்பு
b. தமிழ்நாடு மின்-ஆளுகை முகமை
c. வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கான சிறப்பு வாய்ந்த மையம்
d. மாநிலத் தரவு மையம்

9. Choose the correct statement from the following
   I. TNSDC was started on 2011 under the National e-governance action plan.
   II. This is the first ISO certified state data centre in the country
   III. Tamilnadu Disaster Relief Centre was started on 2017 in Chennai

   a. I and II   b. II and III   c. I and III
   d. All are correct   e. Answer not known

   பின்வரும் கூற்றுகிளல் சரியானதைத் தேர்ந்தெடு
   I. TNSDC என்பது தேசிய மின் ஆளுமை செயல் திட்டத்தின் கீழ் 2011 ஆண்டு தொடங்கப்பட்டது.
   II. இது நாட்டின் முதல் ISO சான்றளிக்கப்பட்ட மாநில தரவு மையமாகும்
   III. தமிழ்நாடு பேரழிவு மீட்பு மையம் (TNDRC) 2017 ஆண்டு சென்னையில் நிறுவப்பட்டது.

   a. I மற்றும் II   b. II மற்றும் III   c. I மற்றும் III
   d. மேற்கண்ட அனைத்தும்   e. விடை தெரியவில்லை

10. _____, an AI based cataract detection tool on mobile, has recently won an award from NASSCOM for its scalability, developed by Government of Tamilnadu.

   a. e- Paarvai   b. e- Kannotam   c. e- Kan
   d. e- Thottram   d. Answer not known

   மொபைலில் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கண்புரை கண்டறியும் _____ கருவியானது, அதன் அளவிடக்கூடிய தன்மைக்காக சமீபத்தில் (NASSCOM) நாஸ்காமின் விருதை வென்றுள்ளது.

   a. e- பார்வை   b. e- கண்னோட்டம்   c. e- கண்
   d. e- தோற்றம்   e. விடை தெரியவில்லை

11. Choose the incorrect statement regarding Red Soil?
   1. Decomposition of ancient crystalline rocks like granite and gneisses.
   2. Rich in formed from Iron and Magnesium
   3. Soil consists of Kaolinitic minerals
   4. Tobacco and Barley growing soil

   a. 1 and 2   b. 3 only   c. 4 only   d. 2 and 3

   செம்மண் தொடர்பான தவறான கூற்று யாது?
   1. பழங்கால படிகபாறைகளான கிரானைட் மற்றும் நீஸ் பாறைகள் சிதைவுறுவதால் உருவாக்கப்படுகிறது.
   2. இரும்பு மற்றும் மெக்னீசியம் அதிகளவில் உள்ளன.
   3. இவை கலோனிட்டிக் கனிமங்களைக் கொண்டுள்ளன.
   4. வால்கோதுமை மற்றும் புகையிலை வளரும் மண்.

   a. 1 மற்றும் 2   b. 3 மட்டும்   c. 4 மட்டும்   d. 2 மற்றும் 3

12. Choose the correct statements regarding Southwest Monsoon (or) Rainy season.
1. Mango showers takes place during this season
2. Monsoon influenced by global phenomenon like (Elnino)
3. Sudden approach of Monsoon over South India is called break (or) burst of Monsoon.
4. 75% of Indian Rainfall received from this Monsoon.

a. 1, 2 b. 2, 3, 4 c. 1, 2, 3 d. All the above

தென்மேற்கு பருவகாற்று அல்லது மழைக்காலம் பற்றிய சரியான கூற்று யாது?
1. மாஞ்சாரல் இக்காலத்தில் நிகழ்கிறது.
2. எல்நீனோ இப்பருவத்தை பாதிக்கிறது.
3. தென்னிந்தியாவில் திடீரென்று நிகழும் பருவகாற்று பருவமழை வெடிப்பு என்று அறியப்படும்.
4. இந்தியாவின் 75% மழைப்பொழிவு இப்பருவத்தால் பெறப்படுகிறது.

a. 1, 2 b. 2, 3, 4 c. 1, 2, 3 d. மேற்கண்ட அனைத்தும்

13. Choose the correct statements about Tropical evergreen forest?
1. Forest found in areas with 200 cm rainfall.
2. These are not fully exploited due to improper transportation.
3. This is also called Monsoon forest.
4. Rubber Mahogany, rosewood are grown.

a. 2,3,4 b. 1, 2, 4 c. 1,3,4 d. All the above

வெப்பமண்டல பசுமைமாறா காடுகள் தொடர்பான சரியான கூற்று எது?
1. இக்காடுகள் 200 செ.மீ மழைப்பொழிவை பெறும் பகுதிகளில் காணப்படுகின்றன.
2. போக்குவரத்து வசதியின்மையினால் இக்காடுகள் பயன்படுத்த இயலவில்லை.
3. இவை பருவகாற்று காடுகள் என்றும் அழைக்கப்படும்.
4. இரப்பர், மகோகனி, செம்மரம் இவற்றில் காணப்படும்.

a. 2,3,4 b. 1,2,4 c. 1,3,4 d. மேற்கண்ட அனைத்தும்

14. Arrange in descending order of peaks at Western Ghats.

a. Dodabetta, Pagasura, Perumalmalai, Mukkurthi
b. Dodabetta, Kottaimalai, Vembadisolai, , Pagasura
c. Dodabetta, Mukkurthi, Vembadi Shola, Pagasura
d. None

பின்வரும் மேற்குதொடர்சி மலையின் சிகரங்களை இறங்கு வரிசைப்படுத்துக.

a. தொட்டபெட்டா, பகாசுரா, பெருமாள்மலை, முக்குருத்தி
b. தொட்டபெட்டா, கோட்டைமலை, வேம்படி சோலை, பகாசுரா
c. தொட்டபெட்டா, முக்குருத்தி, வேம்படி சோலை, பகசுரா
d. எதுவுமில்லை

15. Choose the correct statements regard Tamilnadu.
1. Gulf of Mannar separates Tamilnadu from Srilanka.
2. The state has 1076km long coastline 2nd longest in India after Gujarat.

3. Gulf of Mannar and palk strait separates Tamilnadu from Srilanka.

a. 1, 3 b. 1, 2 c. 1 only d. All of these

தமிழ்நாடு குறித்த சரியானவற்றை கண்டுபிடி.

1. மன்னார் வளைகுடா தமிழகத்தை இலங்கையிலிருந்து பிரிக்கும்.
2. இது குஜராத் மாநிலத்திற்கு அடுத்துள்ள 1076 கி.மீ நீளம் கடற்கரையை கொண்டுள்ள இரண்டாவது மாநிலம்
3. மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீர்சந்தி தமிழகத்தை இலங்கையிலிருந்து பிரிக்கிறது.

a. 1, 3 b. 1, 2 c. 1 மட்டும் d. மேற்கண்ட அனைத்தும்

16. Match the following.

| | |
|---|---|
| A. Theertha malai | 1. Kanyakumari |
| B. Sivan hills | 2. Coimbatore |
| C. Maruthamalai | 3. Erode |
| D. Maruthuvazhmalai | 4. Dharmapuri |

பொருத்துக

| | |
|---|---|
| A. தீர்த்த மலை | 1. கன்னியாகுமரி |
| B. சிவன் மலை | 2. கோயம்புத்தூர் |
| C. மருதமலை | 3. ஈரோடு |
| D. மருதுவாழ் மலை | 4. தர்மபுரி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| b. | 3 | 2 | 4 | 1 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 1 | 2 | 3 | 4 |

e. விடை தெரியவில்லை

17. Find out the wrong statement regarding Cauvery River.

a. About 416 km of its course falls in Tamil Nadu.
b. Noyyal and Amaravathi, confluence the river on the right bank at Thirumukkudal.
c. In Tiruchirappalli, the river branches into two parts. Northern branch is Cauvery and southern branch is Coleroon.
d. The network of delta is known as 'Garden of Southern India'.
e. Answer not known

காவேரி ஆறு பற்றிய தவறான கூற்றைக் காண்க

a. சுமார் 416 கி.மீ. நீளத்திற்கு தமிழ்நாட்டில் பாய்கிறது
b. திருமுக்கூடலில் அமராவதி, நொய்யல் துணை ஆறுகள் வலதுகரையில் காவிரியுடன் இணைகிறது
c. திருச்சியில் பிரியும் இதன் கிளைகளில் வடகிளை காவிரியாகவும், தென்கிளை கொள்ளிடமாகவும் தொடர்கிறது
d. இதன் வலைப்பின்னல் போன்ற டெல்டா பகுதி தென்னிந்தியாவின் தோட்டம் என்று அழைக்கப்படுகிறது.
e. விடை தெரியவில்லை

18. Match the followings.

| | |
|---|---|
| A. Mudumalai Wildlife Sanctuary | 1. Nagapattinam |
| B. Mundanthurai Wildlife Sanctuary | 2. Coimbatore |
| C. Point Calimere Wildlife Sanctuary | 3. Tirunelveli |
| D. Indira Gandhi Wildlife Sanctuary | 4. Nilgiris |

பொருத்துக

| | |
|---|---|
| A. முதுமலை வனவிலங்குகள் சரணாலயம் | 1. நாகப்பட்டினம் |
| B. முண்டந்துறை வனவிலங்குகள் சரணாலயம் | 2. கோயம்புத்தூர் |
| C. கோடியக்கரை வனவிலங்குகள் சரணாலயம் | 3. திருநெல்வேலி |
| D. இந்திரா காந்தி வனவிலங்குகள் சரணாலயம் | 4. நீலகிரி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 4 | 3 | 1 | 2 |
| c. | 4 | 1 | 2 | 3 |
| d. | 4 | 2 | 1 | 3 |

e. விடை தெரியவில்லை

19. Find out the wrong statement among the following.
    I. The forest and tree cover of the State constitutes 24.47% of the total geographical area of the State.
    II. The largest forest cover district is Coimbatore in Tamil Nadu.

a. I only  b. II only  c. Both I and II
d. neither I nor II  e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் தவறானதைக் காண்க
I. தமிழகத்தின் காடு மற்றும் மரங்களின் பரப்பளவு 24.47% (மொத்த பரப்பளவில)
II. தமிழகத்தில் காடுகளின் பரப்பளவு அதிகமுள்ள மாவட்டம் கோயம்புத்தூர்

a. I மட்டும்  b. II மட்டும்  c. இரண்டும்
d. இரண்டுமில்லை  e. விடை தெரியவில்லை

20. First honey bee park in Tamilnadu located at

a. Palani hills  b. Jawadhu Hills  c. Kolli hills
d. Servarayan hills  e. Answer not known

தமிழ்நாட்டின் முதல் தேனீ பூங்கா அமைந்துள்ள இடம்

a. பழனி மலைகள்  b. ஜவ்வாது மலைகள்  c. கொல்லி மலைகள்
d. சேர்வராயன் மலைகள்  e. விடை தெரியவில்லை

21. Which of the following statements regarding Tamil nadu is/are true?
    I. It constitutes 4% of nation's geographical area.
    II. It falls in semi-arid to dry sub humid climate
    III. It has only 2.5% of water resources of India.
    IV. Industries are the largest consumer of water using 57% of state's water resources.

a. I & II b. III & IV c. I, II & III

d. All are true e. Answer not known

தமிழ்நாடு தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது/வை சரியானது

I. இது நாட்டின் புவியியல் பரப்பளவில் 4% ஆகும்.

II. இது பகுதி வறண்ட மற்றும் வறண்ட மித ஈரப்பத கால நிலப்பகுதியில் வருகிறது

III. இந்தியாவின் நீர் வளங்களில் 2.5% மட்டுமே இங்கு உள்ளது.

IV. மாநிலத்தின் 57% நீர் ஆதாரங்களை அதிகபட்சமாக தொழிற்சாலைகள் பயன்படுத்துகின்றன.

a. I & II b. III & IV c. I, II & III

d. அனைத்தும் சரி e. விடை தெரியவில்லை

22. Consider the following statement.

I. Coastal Plains of Tamilnadu are also called coromandel plain, which extends from Chennai to Kanyakumari.

II. The Sand dunes are formed along the coast of Ramanathapuram and Tirunelveli districts are called Teri.

Which of the above statements are correct?

a. I only b. II only c. Both I and II

d. Neither I nor II e. Answer not known

பின்வரும் கூற்றுகளை ஆய்க:

I. தமிழ்நாட்டின் கடலோர சமவெளிகள் கோரமண்டல் சமவெளி என்றும் அழைக்கப்படுகின்றன, இது சென்னை முதல் கன்னியாகுமரி வரை நீண்டுள்ளது.

II. ராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் கடற்கரையில் உருவாகும் மணல் திட்டுகள் தேரி என்று அழைக்கப்படுகின்றன.

மேற்கண்ட கூற்றுகளில் சரியான கூற்று எது?

a. I மட்டும் b. II மட்டும் c. I மற்றும் II இரண்டும்

d. I அல்லது II இரண்டும் இல்லை e. விடை தெரியவில்லை

23. Choose the correct statements about red soil.

I. It cover one-third of the total area of Tamil Nadu.

II. The soil is sandy and loamy in texture.

III. It is dominatry found in Sivagangai and Ramanathapuram District.

a. I and III only b. II and III only c. III only

d. All the above e. Answer not known

பின்வருவனவற்றில் சிவப்பு மண் தொடர்பாக சரியான கூற்றுகளைக் கண்டறிக.

I. இது தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவில் மூன்றில் ஒரு பங்கை உள்ளடக்கியது.

II. இந்த மண் மணல் மற்றும் களிமண் கலந்த அமைப்பைக் கொண்டது.

III. இது சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் முக்கியமாகக் காணப்படுகிறது.

a. I மற்றும் III மட்டும் b. II மற்றும் III மட்டும் c. III மட்டும்
d. மேலே உள்ள அனைத்தும். e. விடை தெரியவில்லை

24. Chinnar, Markandanadhi, Vaniar, Pambar are the tributaries of which among the following rivers?

a. Palar b. Thenpannaiyar c. Cauvery
d. Vaigai e. Answer not known

சின்னாறு , மார்க்கண்டநதி, வாணியாறு, பாம்பார் ஆகியவை பின்வரும் எந்த நதியின் துணை நதிகள்?

a. பாலாறு b. தென்பெண்ணை ஆறு c. காவிரி
d. வைகை e. விடை தெரியவில்லை

25. The major part lies in Tirunelveli district with its southern slope in Kanyakumari. These hills texture richest biodiversity in western ghats. Kalakkad Mundanthurai Tiger Reserve is located in this region.
Which among the following hills is mentioning in this passage?

a. Anaimalai Hills b. Varusanadu Hills c. Pothigai Hills
d. Servarayan Hills e. Answer not known

திருநெல்வேலி மாவட்டத்தில் பெரும்பகுதி மற்றும் கன்னியாகுமரியில் தெற்கு சரிவுகளுடன் அமைந்துள்ள மலைகள், மேற்குத் தொடர்ச்சி மலையின் வளமான பல்லுயிர்ப் பகுதியை கொண்டுள்ளது. களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் இந்த பகுதியில் அமைந்துள்ளது.
மேற்கண்ட பத்தியில் பின்வரும் மலைகளில் எந்த மலையைப் பற்றி குறிப்பிடப்படுகிறது?

a. ஆனைமலை மலைகள் b. வருசநாடு மலைகள் c. பொதிகை மலைகள்
d. சேர்வராயன் மலைகள் e. விடை தெரியவில்லை

26. Choose the correct number of pairs.

1. Bhavani Sagar Dam - Biggest Earthen Dam
2. Amaravathi Dam - Mugger Crocodiles
3. Vaigai Dam - Little Brindavan
4. Manimuthar Dam - Karaiyar Dam

a. 4 pairs b. 3 pairs c. 2 pairs
d. 1 pair e. Answer not known

பின்வரும் இணைகளில் எத்தனை இணைகள் சரியாகப் பொருந்துகின்றன?

1. பவானி சாகர் அணை - பெரிய கல் - மண் அணை
2. அமராவதி அணை - சதுப்பு நில முதலைகள்
3. வைகை அணை - சிறிய பிருந்தாவனம்
4. மணிமுத்தாறு அணை - காரையாறு அணை

a. 4 இணைகள் b. 3 இணைகள் c. 2 இணைகள்
d. 1 இணை e. விடை தெரியவில்லை

27. Consider the following statements.
1. Tropical evergreen forest is found in the upper slopes of Western ghats of Tirunelveli, Kanyakumari and Nilgiris.
2. Trees are Nilgiris champa, weights litsea and rose apple.

Which of above are correct?

a. 1 is correct b. 2 is correct c. Both are correct
d. Both are wrong e. Answer not known

பின்வரும் கூற்றுகளை ஆய்க:
1. வெப்பமண்டல பசுமைமாறாக் காடுகள் திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலையின் சரிவுகளில் காணப்படுகிறது.
2. நீலகிரி சாம்பா, வெள்ளை லிட்சா, ரோஸ் ஆப்பிள் போன்ற மரங்கள் காணப்படுகின்றன.

மேற்கூறியவற்றுள் சரியானவை எவை?

a. 1 சரி b. 2 சரி c. இரண்டும் சரி
d. இரண்டும் தவறு e. விடை தெரியவில்லை

28. Consider the following statements.
1. In south west monsoon, Tamil Nadu is located in rain shadow region.
2. Rainfall during this season increases from west to east.
3. Kanyakumari, Tirunelveli and Nilgiris experience more than 200cm rainfall.

Which of above are correct?

a. 1, 2 b. 2, 3 c. 1 only d. 1, 3 e. Answer not known

பின்வரும் கூற்றுகளை ஆய்க
1. தென்மேற்கு பருவமழையின்போது தமிழ்நாடு மழைமறைவுப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.
2. இப்பருவத்தின் மழைப்பதிவு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அதிகரிக்கிறது.
3. கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் 200 செமீ க்கு அதிகமான மழையைப் பெறுகின்றன.

மேற்கூறியவற்றுள் சரியானவை எவை?

a. 1, 2 b. 2, 3 c. 1 மட்டும் d. 1, 3 e. விடை தெரியவில்லை

29. Which of the following is not correct?

a. North east monsoon is the main rainy season of Tamil Nadu.
b. Coastal districts gets nearly 75% of annual rainfall.
c. Interior districts get 40-50% of their annual rainfall.
d. Tropical cyclones care common during the season.
e. Answer not known

பின் வருவனவற்றுள் எது தவறானது?

a. வடகிழக்குப் பருவம் தமிழ்நாட்டின் முக்கிய மழைக்காலமாகும்.
b. கடற்கரை மாவட்டங்கள் 75% ஆண்டு மழைப்பொழிவைப் பெறுகின்றன.
c. உள் மாவட்டங்கள் 40 % – 50 % ஆண்டு மழைப்பொழிவைப் பெறுகின்றன.
d. பொதுவாக வெப்ப மண்டல சூறாவளிகள் இப்பருவத்தில் உருவாகின்றன.

30. Consider the following statements.

1. Then pennaiyar originates from the eastern slope of Nandi durga hills.
2. Reserovoirs at sathanur only.
3. It branches into two as gadilam and ponnaiyar.

Which of above are correct?

a. 1, 2 b. 2, 3 c. 1, 3
d. 1, 2, 3 e. Answer not known

பின்வரும் கூற்றுகளை ஆய்க

1. தென் பெண்ணையாறு நந்தி துர்கா மலைகளின் கிழக்கு சரிவுகளிலிருந்து உருவாகிறது.
2. சாத்தனூரில் மட்டும் நீர்த்தேக்கம் உள்ளது.
3. கடிலம் மற்றும் பெண்ணையாறு என இரண்டு கிளைகளாக பிரிகிறது.

மேற்கூறியவற்றுள் சரியானவை எவை?

a. 1, 2 b. 2, 3 c. 1, 3
d. 1, 2, 3 e. விடை தெரியவில்லை

31. The chemical mixed with LPG that helps in the detection of its leakage is

a. Methanol b. Ethanol c. Camphor
d. Merchapton e. Answer not known

வாயுக்கசிவை அறிவதற்காக LPG வாயுடன் சேர்க்கப்படும் வேதிப்பொருள்

a. மெத்தனால் b. எத்தனால் c. கற்பூரம்
d. மெர்காப்டன் e. விடைதெரியவில்லை

32. Which is known as synthesis gas?

a. Marsh gas b. Water gas c. Producer gas
d. Coal gas e. Answer not known

தொகுப்பு வாயு எனப்படுவது

a. சதுப்பு நில வாயு b. நீர் வாயு c. உற்பத்தி வாயு
d. நிலக்கரி e. விடைதெரியவில்லை

33. The main component of Natural gas is

a. Methane b. Ethane c. Propane
d. Butane e. Answer not known

இயற்கை வாயுவில் பெரும்பான்மையான பகுதிப்பொருள்

a. மீத்தேன் b. ஈத்தேன் c. புரோப்பேன்
d. பியூட்டேன் e. விடைதெரியவில்லை

34. Producer gas is a mixture of

a. $CO + N_2$ b. $CO_2 + N_2$ c. $CO + H_2O$
d. $CH_4 + N_2$ e. Answer not known

உற்பத்தி வாயு என்பது

a. $CO + N_2$ b. $CO_2 + N_2$ c. $CO + H_2O$
d. $CH_4 + N_2$ e. விடை தெரியவில்லை

35. Rating unit of Petrol
a. Octane b. Cetane c. Butane
d. Pentane e. Answer not known
பெட்ரோலுக்கான மதிப்பீடு அலகு
a. ஆக்டேன் b. சீட்டேன் c. பியூட்டேன்
d. பென்டேன் e. விடை தெரியவில்லை

36. Which is known as Marsh gas?
a. Producer gas b. Butane c. Ethane
d. Methane e. Answer not known
சதுப்புநில வாயு எனப்படுவது?
a. உற்பத்தி வாயு b. பியூட்டேன் c. ஈத்தேன்
d. மீத்தேன் e. விடை தெரியவில்லை

37. LPG gas contains
a. Propane and Butane b. Methane and Propane
c. Methane and Ethane d. Propane and Pentane
e. Answer not known
LPG வாயுவில் அடங்கியவை
a. புரோப்பேன் மற்றும் பியூட்டேன் b. மீத்தேன் மற்றும் புரேப்பேன்
c. மீத்தேன் மற்றும் ஈத்தேன் d. புரோப்பேன் மற்றும் பென்டேன்
e. விடை தெரியவில்லை

38. Natural gas contains
a. Methane and higher alkanes b. Methane and lower alkanes
c. Methane d. Propane and Butane
e. Answer not known
இயற்கை வாயுவின் கலவை
a. மீத்தேன் மற்றும் உயர் அல்கேன்கள்
b. மீத்தேன் மற்றும் குறை அல்கேன்கள்
c. மீத்தேன்
d. புரோப்பேன் மற்றும் பியூட்டேன்
e. விடை தெரியவில்லை

39. Biogas contains
a. $CO + N_2$ b. $CH_4 + CO_2$ c. $CO_2 + N_2$
d. $CH_4 + H_2O$ e. Answer not known
உயிரிவாயுவில் அடங்கியுள்ளவை
a. $CO + N_2$ b. $CH_4 + CO_2$ c. $CO_2 + N_2$
d. $CH_4 + H_2O$ e. விடை தெரியவில்லை

40. Water gas contains

a. $CO + H_2$ b. $CO_2 + H_2$ c. $CO_2 + H_2O$

d. $CO + H_2O$ e. Answer not known

நீர் வாயுவில் அடங்கியுள்ளவை

a. $CO + H_2$ b. $CO_2 + H_2$ c. $CO_2 + H_2O$

d. $CO + H_2O$ e. விடை தெரியவில்லை

41. Coal gas is a mixture of

a. $H_2 + CO + CH_4$ b. $H_2O + CO_2 + CH_4$ c. $H_2 + CH_4 + N_2$

d. $H_2 + CH_4 + CO_2$ e. Answer not known

நிலக்கரி வாயுவிலுள்ள கலவை

a. $H_2 + CO + CH_4$ b. $H_2O + CO_2 + CH_4$ c. $H_2 + CH_4 + N_2$

d. $H_2 + CH_4 + CO_2$ e. விடை தெரியவில்லை

42. Which of the following has high calorific value?

a. Petrol b. LPG c. CNG d. $H_2$ e. Answer not known

அதிக எரிபொருள் கலோரி மதிப்பை உடையது

a. பெட்ரோல் b. LPG c. CNG d. $H_2$ e. விடை தெரியவில்லை

43. Which of the following is correct order based on high calorific value?

I. Petrol II. LPG III. CNG IV. Biogas V. Hydrogen

a. V, II, III, IV, I b. II, V, III, I, IV c. V, II, III, I, IV

d. V, III, II, I, IV e. Answer not known

பின்வருவனவற்றுள் அதிக எரிபொருள் திறன் அடிப்படையில் சரியான வரிசை எது?

I. பெட்ரோல் II. LPG III. CNG

IV. உயிரிவாயு V. ஹைட்ரஜன்

a. V, II, III, IV, I b. II, V, III, I, IV c. V, II, III, I, IV

d. V, III, II, I, IV e. விடை தெரியவில்லை

44. Which of the following is/are correct?

I. Octane number of Petrol can be increased by adding Acetone.

II. Cetane number of diesel can be increased by adding benzene or toluene.

a. I only b. II only c. Both are correct

d. Both are wrong e. Answer not known

பின்வருவனவற்றுள் சரியான கூற்று எது?

I. அசிட்டோனை சேர்ப்பதன் மூலம் பெட்ரோலின் ஆக்டேன் எண்ணை அதிகரிக்க முடியும்.

II. பென்சீன் (அல்லது) டொலுவீனை சேர்ப்பதன் மூலம் டீசலின் சீட்டேன் எண்ணை அதிகரிக்க முடியும்.

a. I மட்டும் b. II மட்டும் c. இரண்டும் சரி

d. இரண்டும் தவறு e. விடை தெரியவில்லை

45. While charging lead storage battery.

a. $PbSO_4$ on cathode is reduced to Pb
b. $PbSO_4$ on anode is oxidized to $PbO_2$
c. $PbSO_4$ on anode is reduced to Pb
d. $PbSO_4$ on cathode is oxidized to Pb
e. Answer not known

லெட் சேமிப்புக் கலனை மின்னேற்றம் செய்யும் போது

a. எதிர்மின்முனையில் $PbSO_4$ ஆனது Pb ஆக ஒடுக்கமடைகிறது.
b. நேர்மின்முனையில் $PbSO_4$ ஆனது $PbO_2$ ஆக ஆக்சிஜனேற்றமடைகிறது.
c. நேர்மின்முனையில் $PbSO_4$ ஆனது Pb ஆக ஒடுக்கமடைகிறது.
d. எதிர்மின்முனையில் $PbSO_4$ ஆனது Pb ஆக ஆக்சிஜனேற்றமடைகிறது.
e. விடை தெரியவில்லை

46. Among the following cells

I. Leclanche cell II. Nickle – Cadmium cell
III. Lead – Storage battery IV. Mercury cell

Primary cells are

a. I and IV b. I and III c. III and IV
d. II and III e. Answer not known

பின்வரும் மின்கலங்களில்

I. லெக்லாஞ்சி மின்கலம் II. நிக்கல் - காட்மியம் மின்கலம்
III. காரீய சேமிப்புக் கலம் IV. மெர்குரி மின்கலம்

எவை முதன்மை மின்கலங்களாகும்?

a. I மற்றும் IV b. I மற்றும் III c. III மற்றும் IV
d. II மற்றும் III e. விடை தெரியவில்லை

47. In $H_2 – O_2$ fuel cell the reaction occurs at cathode is

a. $O_{2(g)} + 2H_2O(l) + 4e^- \rightarrow 4\ OH^-(aq)$ b. $H^+(aq) + OH^-(aq) \rightarrow H_2O\ (l)$
c. $2H_{2(g)} + O_{2(g)} \rightarrow 2H_2O_{(g)}$ d. $H^+ + e^- \rightarrow \frac{1}{2} H_2$
e. Answer not known

எரிபொருள் மின்கலத்தில் எதிர்மின்முனையில் நிகழும் வினை.

a. $O_{2(g)} + 2H_2O(l) + 4e^- \rightarrow 4\ OH^-(aq)$ b. $H^+(aq) + OH^-(aq) \rightarrow H_2O\ (l)$
c. $2H_{2(g)} + O_{2(g)} \rightarrow 2H_2O_{(g)}$ d. $H^+ + e^- \rightarrow \frac{1}{2} H_2$
e. விடை தெரியவில்லை

48. A device that converts the energy of combustion of fuels like hydrogen and Methan directly into electrical energy is known as

a. Ni-cd cell b. Fuel cell c. Electrolytic cell
d. Dynamo e. Answer not known

ஹைட்ரஜன் மற்றும் மீத்தேனை எரிக்கும்போது நேரடியாக மின்னாற்றலாக மாற்றும் மின்கலன் எது?

a. Ni-cd மின்கலன் b. எரிமின்கலன் c. மின்வேதிகலன்
d. டைனமோ e. விடை தெரியவில்லை

49. Which of the following is not correct for dry cell?
a. Zinc is used as anode b. Manganese is reduced from +4 to +3 state
c. It is a primary cell d. $NH_3$ gas is liberated out
e. Answer not known
உலர்மின்கலன் பற்றிய பின்வரும் கூற்றுகளில் தவறானது எது?
a. ஜிங்க் ஆனோடாக பயன்படுகிறது
b. மாங்கனீசு +4 லிருந்து +3 ஆக குறைகிறது
c. இது ஒரு முதன்மை மின்கலன்
d. $NH_3$ வாயு வெளியேறுகிறது
e. விடை தெரியவில்லை

50. New elements do not formed in
I. α - decay II. β - decay III. γ - decay
a. III only b. II only c. I & III
d. All the above e. Answer not known
புதிய தனிமம் எதில் உருவாகாது?
I. α - சிதைவு II. β - சிதைவு III. γ - சிதைவு
a. III மட்டும் b. II மட்டும் c. I மற்றும் III
d. மேற்கண்ட அனைத்தும் e. விடை தெரியவில்லை

51. Which of the following is heaviest one?
a. $H_2$ b. Alpha c. Beta d. Gamma e. Answer not known
பின்வருவனவற்றுள் கனமானது எது?
a. $H_2$ b. ஆல்பா c. பீட்டா d. காமா e. விடை தெரியவில்லை

52. The safe limit of receiving the radiation is about
a. 1 R b. 0.1 R c. 100 R d. 10 R e. Answer not known
மனிதனால் பெறப்படும் கதிரியக்கத்தின் அனுமதிக்கப்பட்ட அளவு
a. 1 R b. 0.1 R c. 100 R d. 10 R e. விடை தெரியவில்லை

53. Isotope of ____ element is used to age of old oil painting.
a. Carbon b. Californium c. Americium
d. Phosphorous e. Answer not known
பழங்கால எண்ணெய் ஓவியங்களின் வயதினை கண்டறிய பயன்படும் ஐசோடோப்பு தனிமம்
a. கார்பன் b. கலிபோர்னியம் c. அமெர்சியம்
d. பாஸ்பரஸ் e. விடை தெரியவில்லை

54. Reason for nuclear fission to be a chain reaction is
I. 200 MeV energy is produced
II. Two smaller nuclei formed
III. 3 neutron are formed for further reaction

a. I only b. II only c. III only
d. I, II, III e. Answer not known
அணுக்கரு பிளவு வினையானது தொடர் வினையாக நடைபெற காரணம்
I. 200 MeV ஆற்றல் வெளிப்படும்
II. இரு லேசான தனிமங்கள் உருவாகும்.
III. வெளிப்படும் 3 நியூட்ரான்கள் அடுத்த பிளவை உருவாக்கும்.
a. I மட்டும் b. II மட்டும் c. III மட்டும்
d. I, II, III e. விடை தெரியவில்லை

55. In a nuclear reactor, boron is used as
a. fuel b. moderator c. control rod
d. protection wall e. Answer not known
ஒரு அணுக்கரு உலையில் போரானின் பயன்
a. எரிபொருள் b. தணிப்பான் c. கட்டுப்படுத்தும் தண்டு
d. பாதுகாப்பு சுவர் e. விடை தெரியவில்லை

56. Match the following
A. J.J. Thomson 1. Neutron
B. Goldstein 2. Electrons
C. Chadwick 3. Nucleus
D. Rutherford 4. Protons
பொருத்துக.
A. J.J. தாம்சன் 1. நியூட்ரான்
B. கோல்ட்ஸ்டீன் 2. எலக்ட்ரான்
C. சாட்விக் 3. அணுக்கரு
D. ரூதர்ஃபோர்டு 4. புரோட்டான்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 1 | 3 |
| b. | 2 | 4 | 3 | 1 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

57. Match the following
A. Alpha rays 1. Negative particles
B. Beta rays 2. Electromagnetic radiation
C. Gamma rays 3. Positive electron
D. Positron 4. Nucleus of Helium
பொருத்துக.
A. ஆல்பா கதிர் 1. எதிர்மின் துகள்கள்
B. பீட்டா கதிர் 2. மின்காந்த அலைகள்
C. காமா கதிர் 3. நேர்மின் துகள்கள்
D. பாசிட்ரான் 4. ஹீலியம் அணுக்கரு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 3 | 2 |
| b. | 4 | 1 | 2 | 3 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 4 | 3 | 2 | 1 |

58. Which of the following statements are not correct?
I. Heavier nucleus participation in Nuclear Fission.
II. I - 131 is used to cure Goiter.
a. I only b. II only c. I and II
d. Neither I nor II e. Answer not known
பின்வரும் கூற்றுகளில் எவை தவறு
I. அணுக்கரு பிளவு வினையில் கனமான அணுக்கருக்கள் பங்கு பெறும்.
II. I-131 ஆனது காய்டர் நோயை குணப்படுத்துகிறது.
a. I மட்டும் b. II மட்டும் c. I மற்றும் II
d. இரண்டுமில்லை e. விடை தெரியவில்லை

59. Paschen series of hydrogen atom comes under ____ region.
a. IR b. UV c. X-ray d. visible e. Answer not known
ஹைட்ரஜன் நிறமாலையில் பாஷன் வரிசை உணரும் பகுதி.
a. IR b. UV c. X-கதிர் d. கட்புலனாகும் பகுதி e. விடை தெரியவில்லை

60. Elements having atomic number greater than ____ are radioactive.
a. 83 b. 88 c. 68 d. 48 e. Answer not known
இயற்கையான முறையில் கதிரியக்கம் நடைபெற அணு எண் எதனைவிட அதிகமாக இருக்க வேண்டும்.
a. 83 b. 88 c. 68 d. 48 e. விடை தெரியவில்லை

61. The nature of Gamma rays
a. Gravitational force b. Electromagnetic waves
c. Weak force d. Nuclear force
e. Answer not known
காமா கதிர்களின் தன்மை
a. புவிஈர்ப்பு விசை b. மின்காந்த அலை c. வலிமைகுறைந்த விசை
d. அணுக்கரு விசை e. விடை தெரியவில்லை

62. Natural uranium consist of
a. 0.72% of $U^{235}$ + 99.28% of $U^{238}$ b. 99.28% of $U^{235}$ + 0.72% of $U^{238}$
c. 77.28% of $U^{235}$ + 72% of $U^{238}$ d. 72% of $U^{235}$ + 77.28% of $U^{238}$
இயற்கை யுரேனியத்தில் காணப்படுவது
a. 0.72% of $U^{235}$ + 99.28% of $U^{238}$ b. 99.28% of $U^{235}$ + 0.72% of $U^{238}$
c. 77.28% of $U^{235}$ + 72% of $U^{238}$ d. 72% of $U^{235}$ + 77.28% of $U^{238}$

63. The basic principle of Optical Fiber Communication
a. LED b. Reflection c. Refraction d. Total Internal Reflection
ஒளி இழைத் தகவல் தொடர்பின் அடிப்படைத் தத்துவம்
a. LED b. ஒளி எதிரொளிப்பு c. ஒளி விலகல் d. முழு அக எதிரொளிப்பு

64. The principle of RADAR
a. Doppler effect b. Peltier effect c. Seman effect
d. Total Internal Reflections e. Answer not known
RADAR ன் அடிப்படைத் தத்துவம்
a. டாப்ளர் விளைவு b. பெல்டியர் விளைவு c. சீமன் விளைவு
d. முழு அக எதிரொளிப்பு

65. The energy band gap maximum in
a. Metals b. Insulators c. Semi-conductor
d. Super conductors e. Answer not known
அதிக ஆற்றல் பட்டை இடைவெளி உடையது
a. உலோகங்கள் b. காப்பான்கள் c. குறைகடத்திகள்
d. மீக்டத்திகள் e. விடை தெரியவில்லை

66. A pure semiconductor behaves slightly as a conductor at
a. low temperature b. high temperature c. room temperature
d. zero-degree e. Answer not known
ஒரு தூய குறைக்கடத்தி, சிறிய அளவு கடத்தும் திறனை பெறும் சூழ்நிலை.
a. குறை வெப்பநிலை b. அதிக வெப்பநிலை c. அறை வெப்பநிலை
d. பூஜ்ஜிய வெப்பநிலை e. விடை தெரியவில்லை

67. To obtain a P-type germanium semiconductor, it must be doped with
P – வகை ஜெர்மானிய குறைகடத்தி உருவாக, இதனுடன் சேர்க்கப்படும் தனிமம்.
a. In b. P c. AS d. Sb

68. The audio Frequency Range is
a. 20 Hz to 200 Hz b. 20 Hz to 2000 Hz c. 20 Hz to 2,00,000 Hz
d. 20 Hz to 20,000 Hz e. Answer not known
கேட்கக்கூடிய அதிர்வெண்ணின் வீச்சு
a. 20 Hz to 200 Hz b. 20 Hz to 2000 Hz c. 20 Hz to 2,00,000 Hz
d. 20 Hz to 20,000 Hz e. விடை தெரியவில்லை

69. Digital signals are converted into analog signals using
a. FAX b. Modem c. alternator
d. decoder e. Answer not known
டிஜிட்டல் வகை சைகைகளை எண்ணில் வகை சைகைகளாக மாற்றுவது
a. FAX b. மோடம் c. மின்மாற்றி
d. குறிவிலக்கிகள் e. விடை தெரியவில்லை

70. When a pentavalent impurity is added a pure semi-conductor we get
a. N-Type b. P-Type c. A-Type d. S-Type e. Answer not known
ஒரு தூய குறைக்கடத்தியுடன், ஐந்து இணைதிறன் உடைய தனிமத்துடன் சேர்க்கும் போது கிடைப்பது.
a. N-வகை b. P-வகை c. A-வகை
d. S-வகை e. விடை தெரியவில்லை

71. Match the couplets

| | |
|---|---|
| A. Perumavatrul yamarivathu illai arivarinthu | 1. Mannuyir kellam inidhu |
| B. Thamporul enbatham makkal avarporul | 2. Sorkettal inbam sevikku |
| C. Makkal mei theendal udarkinbam matruavar | 3. Makatperu all pira |
| D. Thamintham makkal arivudamai maanilathu | 4. Thatham vinaiyal varum |

குறட்பாக்களை பொருத்துக?

| | |
|---|---|
| A. பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த | 1. மன்னுயிர்க் கெல்லாம் இனிது |
| B. தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள் | 2. சொற்கேட்டல் இன்பம் செவிக்கு |
| C. மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர் | 3. மக்கட்பேறு அல்ல பிற |
| D. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து | 4. தம்தம் வினையாள் வரும் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 3 | 4 | 2 | 1 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 4 | 3 | 1 | 2 |

72. Match the couplets.

| | |
|---|---|
| A. Anbaga thilla uyirvaazhkhai vanbaarkan | 1. Ondrunandru ulla kedum |
| B. Kondrenna inna seyinum avarseidha | 2. Enbuthol portna udambu |
| C. Keduvaiyaan enbadhu arikadhan nenjam | 3. Vatral maranthilar thatru |
| D. Anbin vazhiyadhu uyirniali aghthilaarku | 4. Naduvaoree all seyin |

குறட்பாக்களை பொருத்தவும்

| | |
|---|---|
| A. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண் | 1. ஒன்றுநன்று உள்ளக் கெடும் |
| B. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த | 2. என்புதோல் போர்த்த உடம்பு |

C. கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம் — 3. வற்றல் மரந்தளிர்த் தற்று

D. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு — 4. நடுவொரீஇ அல்ல செயின்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 4 | 2 |
| b. | 4 | 1 | 3 | 2 |
| c. | 3 | 2 | 4 | 1 |
| d. | 4 | 2 | 3 | 1 |

e. விடை தெரியவில்லை

73. In the kural starting with "Purathu pellam yevanseitum yaakai" the word yaakai means?

a. Bone b. Heart c. Body
d. Skin e. Answer not known

"புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை" என தொடங்கும் குறளில் யாக்கை என்றால் என்ன?

a. எலும்பு b. நெஞ்சம் c. உடம்பு
d. தோல் e. விடை தெரியவில்லை

74. Vithum idaivendum Kolloa virundhombi

______________________________

a. Nalvirunthu ombuvan ill b. Michill misaivan pulam
c. Nalvirunthu vaana thavarku d. Velanmai seidhar porutu
e. Answer not known

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி

______________________________

a. நல்விருந்து ஓம்புவான் இல் b. மிச்சில் மிசைவான் புலம்
c. நல்விருந்து வானத் தவர்க்கு d. வேளாண்மை செய்தற் பொருட்டு
e. விடை தெரியவில்லை

75. Parindhompip Patratrem Enpar Virundhompi
Velvi Thalaippataa Thaar
The meaning of above couplet is

a. The benefit of hospitality will be supportive as the benefit of velvil/yaaga.
b. The stupidity which exercise no hospitality is poverty.
c. When acquired wealth perishes, they regret that it was not used for hospitality.
d. None of the above
e. Answer not known

பரிந்தோம்பிப் பற்றற்றோம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.
என்ற குறள் உணர்த்தும் செய்தி யாது?

a. விருந்தின் பயன் ஒரு வேள்வியின் பயன் போல் துணையாக இருக்கும்
b. செல்வ நிலையில் உள்ள வறுமை என்பது விருந்தோம்பலைப் போற்றாத அறியாமையாகும்.
c. சேர்த்த செல்வத்தை இழக்கும் போது, விருந்தோம்பல் என்னும் வேள்விக்கு பயன்படவில்லையே என வருந்துவர்.
d. இவற்றுள் எதுவும் இல்லை
e. விடை தெரியவில்லை

76. Match the couplets

| | |
|---|---|
| A. Irunthombi Ilvaazhvu thellam virunthombi | 1. Thunaithunai velvi payan |
| B. Aganamarndhu seiyyal uraiyum muganamarandhu | 2. Nalvirunthu vana thavarukku |
| C. Selvirundhu ombhi varuvirundhu paarthirupaan | 3. Nalvirunthu ombuvan ill |
| D. Inaiththunaith Thenpadhon Rillai Virundhin | 4. Velanmai seidhar porutu |

பொருத்துக.

| | |
|---|---|
| A. இருந்தோம்பி இல்வாழ்வு தெல்லாம் விருந்தோம்பி | 1. துணைத்துணை வேள்விப் பயன் |
| B. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து | 2. நல்விருந்து வானத் தவர்க்கு |
| C. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான் | 3. நல்விருந்து ஓம்புவான் இல் |
| D. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின் | 4. வேளாண்மை செய்தற் பொருட்டு |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 4 | 2 | 3 | 1 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| d. | 2 | 4 | 1 | 3 |

e. விடை தெரியவில்லை

77. ________________________________
Insao linidae aram

a. Aganamarndhu yeidhalin nandrae muganamarandhu
b. Panivudaiyan insolan aadhal oruvaruku
c. Iniya ulavaga innadha kooral
d. None of the above
e. Answer not known

இன்சொ லினதே அறம்
a. அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
b. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
c. இனிய உளவாக இன்னாத கூறல்
d. மேற்கண்ட ஏதுமில்லை
e. விடை தெரியவில்லை

78. Aganamarndhu yeidhalin nandrae muganamarandhu
Insolan aaga perin
The above couplet belongs to the chapter?
a. Giving b. Veracity c. The utterance of pleasant words
d. Against vain speaking e. Answer not known
அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்
என்ற குறட்பா இடம்பெற்றுள்ள அதிகாரம் யாது?
a. ஈகை b. வாய்மை c. இனியவைகூறல்
d. பயனில் சொல்லாமை e. விடை தெரியவில்லை

79. Pick the correct Pairs

| Iyal | | Numbers |
|---|---|---|
| 1. Payiram | - | 4 |
| 2. Illaram | - | 20 |
| 3. Thuravaram | - | 13 |
| 4. Ozhliyal | - | 1 |
| 5. Arasiyal | - | 25 |

a. All are correct b. None of the above c. 1, 3, 5 alone
d.2, 3, 4 alone e. Answer not known
சரியான இணைகளை தேர்வு செய்க.

| இயல் | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. பாயிரம் | - | 4 |
| 2. இல்லறம் | - | 20 |
| 3. துறவறவியல் | - | 13 |
| 4. ஊழியல் | - | 1 |
| 5. அரசியல் | - | 25 |


a. அனைத்தும் சரி b. மேற்கண்ட ஏதுமில்லை c. 1, 3, 5 மட்டும்
d. 2, 3, 4 மட்டும் e. விடை தெரியவில்லை

80. Owing to the Specialty of Kambaramayanam and pride of Thirukural these two books are highly regarded as “Tamizhuku Kathi” is said by?
a. Azhagiya Sokkanathar b. Palapattadai Sokkanathar
c. Kadigai Muthupulavar d. Selva Kesava Muthaliyar
e. Answer not known

கம்பராமயணத்தின் சிறப்பு கருதியும், திருக்குறளின் பெருமை கருதியும் இவ்விரு நூல்களை தமிழுக்கு கதி எனக் கூறியவர் யார்?


a. அழகிய சொக்கநாதர்
b. பலபட்டடை சொக்கநாதர்
c. கடிகை முத்துபுலவர்
d. செல்வ கேசவ முதலியார்
e. விடை தெரியவில்லை

81. Which of the following figures can be formed on folding the given open cube in the question?
கொடுக்கப்பட்ட திறந்த கனசதுரத்தை மடிப்பதன் மூலம் கீழ்க்கண்ட எந்த வடிவத்தை உருவாக்க முடியும்.





a. 
b. 
c. 
d. 
e. விடை தெரியவில்லை


82. By folding the given paper, which of the following box cannot be made?
கொடுக்கப்பட்ட தாளை மடிப்பதன் மூலம் கீழ்க்கண்ட எந்த பெட்டியை உருவாக்க முடியாது.






a. 
b. 
c. 
d. 


83. By folding the given paper, which of the following box can be made?
கொடுக்கப்பட்ட தாளை மடிப்பதன் மூலம் கீழ்க்கண்ட எந்த பெட்டியை உருவாக்க முடியும்.





a. 

b. 

c. 

d. 

84. Three different positions of the same dice are shown. (figures 1 to 3). Find the number on the face opposite the face having '1'.





a. 6 b. 4 c. 5 d. 3

ஒரே பகடையின் மூன்று நிலைகள் கொடுக்கப்பட்டுள்ளன. (படங்கள் 1, 2, 3) 1 என்ற எண்ணை கொண்ட முகத்தின் எதிர் முகத்தில் அமையும் எண்ணைக் காண்க.

a. 6 b. 4 c. 5 d. 3

85. Four different positions of the same dice are shown, the six faces of which are numbered 1 to 6. Select the number that will be on the face opposite to the one showing '4'.

ஒரு பகடையின் நான்கு நிலைகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆறு முகங்களும் 1 முதல் 6 வரை எண்ணிக்கையிடப்பட்டுள்ளது. 4- என்ற முகத்தின் எதிர் முக எண்ணைக் காண்க.




a. 1 b. 2 c. 3 d. 5

86. Kunal's house is located to the south of a coffee shop. There is a park to the east of the coffee shop. The local market is to the north of the park. If the distance of the market from the park is equal to the distance of the coffee shop from Kunal's house in which direction is the market with respect to the coffee shop?

a. South – West b. West c. South – East d. North – East

குணால் வீடு ஒரு காபி கடைக்கு தெற்கே அமைந்துள்ளது. காபி கடைக்கு கிழக்கே ஒரு பூங்கா உள்ளது. உள்ளூர் சந்தையானது பூங்காவின் வடக்கே உள்ளது. பூங்காவிலிருந்து சந்தையின் தூரம் குணால் வீட்டிலிருந்து காபி கடையின் தூரத்திற்கு சமம் எனில் காபி கடையை பொறுத்து சந்தை எத்திசையில் உள்ளது.

a. தென் மேற்கு b. மேற்கு c. தென்கிழக்கு d. வடகிழக்கு

87. If the minute hand of a clock points towards the South at 12:00 am, then in which direction will the minute hand point at 3:00 a.m. in the same clock?

a. South b. East c. North d. West

ஒரு கடிகாரத்தின் நிமிடமுள் நள்ளிரவு 12.00 மணிக்கு தெற்கு நோக்கி இருந்தால் அதே கடிகாரத்தில் 3:00 மு.ப. மணிக்கு நிமிடமுள் எந்த திசையை நோக்கி இருக்கும்

a. தெற்கு b. கிழக்கு c. வடக்கு d. மேற்கு

88. Priya's school bus was facing north-west when it reached her school. After starting from her house, the bus took on left turn, one right turn and another left turn to reach her school. In which direction was the bus facing when it left Priya's house?

a. South – east b. North – West c. South - west d. North – east

பிரியாவின் பள்ளிப்பேருந்து அவள் பள்ளியை அடைந்தபோது வடமேற்கு நோக்கி இருந்தது அவள் வீட்டிலிருந்து புறப்பட்ட பிறகு பேருந்து இடது திரும்பியது. பின் ஒரு வலது புறமும் இடது புறமும் திரும்பி பள்ளியை அடைந்தது. வீட்டிலிருந்து புறப்படும் போது பேருந்து எந்த திசையை நோக்கி இருந்தது.

a. தென்கிழக்கு b. வடமேற்கு c. தென்மேற்கு d. வடகிழக்கு

89. One morning, Chitrashi and Ayaan sit facing each other. If the shadow of Ayaan falls to the left of Chitrashi, then in which direction is Ayaan facing?

a. North b. East c. South d. West e. Answer not known

ஒரு காலை நேரத்தில் சித்ராஷியும் அயனும் எதிரெதிர் திசையில் அமர்ந்திருக்கின்றனர். அயனின் நிழல் சித்ராஷியின் இடப்புறம் விழுந்தால், அயன் எந்த திசையை நோக்கி இருப்பார்?

a. வடக்கு b. கிழக்கு c. தெற்கு d. மேற்கு e. விடை தெரியவில்லை

90. Four villages A, B, C and D lie in a straight line. D is 10 kms from B. A is exactly between D and C and C from B is 2 kms more than it is from D. How far is C from B?

a. 4 Kms b. 6 kms c. 8 kms d. 2 kms e. Answer not known

A, B, C, D என்ற நான்கு கிராமங்கள் ஒரே நேர்கோட்டில் உள்ளன. D என்பது B யிலிருந்து 10 கி.மீ. A என்பது D மற்றும் C-ன் மையத்தில் உள்ளது. மேலும் C, B யிலிருந்து உள்ள தொலைவு D-லிருந்து உள்ள தொலைவைவிட 2 கி.மீ அதிகம். C என்பது B யிலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளது?

a. 4 கி.மீ b. 6 கி.மீ c. 8 கி.மீ d. 2 கி.மீ e. விடை தெரியவில்லை

91. Deepak starts walking straight towards east. After walking 75 metres, he turns to the left and walks 25 metres straight. Again he turns to the left, walks a distance of 40 metres straight, again he turns to the left and walks a distance of 25 metres. How far is he from the starting point?

a. 25 metres b. 35 metres c. 115 metres d. 140 metres

தீபக் கிழக்கு திசையில் நேராக சென்றார். 75 மீ நடந்த பிறகு இடப்பக்கம் திரும்பி 25 மீ நடந்து மீண்டும் இடப்பக்கம் திரும்பி 40 மீ நடந்து சென்றார். இறுதியாக மீண்டும் இடப்பக்கம் திரும்பி 25 மீ சென்றார். தன் துவக்க இடத்திலிருந்து எவ்வளவு தூரம் சென்றிருப்பார்?

a. 25 மீ b. 35 மீ c. 115 மீ d. 140 மீ

92. Pointing to a woman, Ananth said, "She is the mother-in-law of the mother-in-law of the daughter-in-law of my father'. How is Ananth related to the woman?

a. Father b. Brother c. Grandson d. Son

ஒரு பெண்ணைச் சுட்டி ஆனந்த், "அவர் என் தந்தையின் மருமகளின் மாமியாரின் மாமியார்" என்றார், எனில் ஆனந்த் அப்பெண்ணுடன் எந்த வகையில் உறவு?

a. தந்தை b. சகோதரர் c. பேரன் d. மகன்

93. If A – B means that A is the mother of B, A + B means that A is the father of B, A ÷ B means that A is the sister of B, then which of the following expression shows that P is the aunt of Q?

A – B என்றால் A என்பவர் B -ன் தாய், A + B என்றால் A என்பவர் B -ன் தந்தை, A ÷ B என்றால் A என்பவர் B -ன் சகோதரி, எனில் பின்வருவனவற்றில் எது P என்பவர் Q வின் சித்தி/பெரியம்மா ஆகும்?

a. P + R ÷ Q b. R + P- Q c. P ÷ R – Q d. R ÷ P – Q

94. If A ÷ B means that A is the father of B, A × B means that A is the mother of B, A + B means that A is the brother of B then which of the following expression shows that Q is the daughter of P?

A ÷ B என்றால் A என்பவர் B-ன் தந்தை, A × B என்றால் A என்பவர் B-ன் தாய், A + B என்றால் A என்பவர் B-ன் சகோதரர், எனில் பின்வருவனவற்றில் எது Q என்பவர் P-ன் மகள் என்பதை குறிக்கிறது?

a. P ÷ Q × R b. P + Q × R c. P × Q ÷ R d. P + Q ÷ R

95. A side of a square-shaped park is 12 m. If a squared shaped garden with a side of 24 m is developed around the park, what will be the total area of the park including the garden?

சதுர வடிவ பூங்காவின் பக்கம் 12 மீ, பூங்காவை சுற்றி 24 மீ பக்கத்துடன் சதுர வடிவ, தோட்டம் உருவாக்கப்பட்டால், தோட்டத்துடன் சேர்த்து பூங்காவின் பரப்பளவை காண்க.

a. 144 $m^2$ b. 288 $m^2$ c. 576 $m^2$ d. 324 $m^2$

96. The total of three numbers is 240. The second number is four times the first number. The third number is three times the first number. What will be the average of the three numbers?

மூன்று எண்களின் கூடுதல் 240. இரண்டாம் எண் முதல் எண்ணைப்போல் நான்கு மடங்கு, மூன்றாம் எண் முதல் என்னைப்போல் மூன்று மடங்கு ஆகும். மூன்று எண்களின் சராசரி காண்க.

a. 80 b. 50 c. 60 d. 70

97. Mohit and Sudesh bought pens and notebooks from the same shop. Mohit bought 3 pens and 6 notebooks by paying an amount of Rs.180. Sudesh bought 5 pens and 2 notebooks by paying an amount of Rs.116. How much did Mohit spend on buying notebooks?

மோகித் மற்றும் சுதேஷ் ஆகியோர் ஒரே கடையில் பேனா மற்றும் நோட்டுப் புத்தகங்களை வாங்கினர். மோகித் ரூ 180 செலுத்தி 3 பேனாக்கள் மற்றும் 6 நோட்டுப் புத்தகங்களையும் வாங்கினார். சுதேஷ் ரூ 116 செலுத்தி 5 பேனாக்கள் மற்றும் 2 நோட்டுப் புத்தகங்களையும் வாங்கினார். மோகித் நோட்டுப்புத்தங்கள் வாங்க செலவழித்த தொகையை காண்க.

a. Rs.84 b. Rs.138 c. Rs.122 d. Rs.115

98. The average salary of the entire teaching staff in a college is Rs.2000 per day. The average salary of the male teachers is Rs.2500 and that of the female teachers is Rs.1200. If the number of male teacher is 16, then find the number of female teachers in the college.

ஒரு கல்லூரியில் மொத்த ஆசிரியர்களின் சராசரி ஊதியம் ஒரு நாளைக்கு ரூ 2000. ஆண் ஆசிரியர்களின் சராசரி ஊதியம் ரூ 2500 மற்றும் பெண் ஆசிரியர்களின் சராசரி ஊதியம் ரூ 1200. ஆண் ஆசிரியர்களின் எண்ணிக்கை 16 எனில் பெண் ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் காண்க.

a. 12 b. 10 c. 18 d. 14

99. In a coaching institute, the number of students in class 10 is 1/3 more than the number of students in class 12. If the total number of students of class 10 and class 12 in the institute is 112, find the number of students in class 10 in that institute.

ஒரு பயிற்சி நிறுவனத்தில், 10 ஆம் வகுப்பில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 12 ஆம் வகுப்பில் உள்ள மாணவர்களைவிட 1/3 மடங்கு அதிகம். அந்த நிறுவனத்தில் உள்ள 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 112 எனில் 10 ஆம் வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கையை காண்க.

a. 64 b. 52 c. 48 d. 70

100. When number X multiplied to its next number, the product 1260 is obtained. When number X is added to number Y, a total of 106 is obtained. Find the value of Number Y. (Assume numbers to be positive)

x என்ற எண்ணை அதன் அடுத்த எண்ணுடன் பெருக்கும் போது 1260 கிடைக்கும். x என்ற எண்ணை y என்ற எண்ணுடன் கூட்டினால் 106 கிடைக்கும் எனில், y ன் மதிப்பை காண்க. (எண்கள் நேர்மறை எனக் கொள்க)

a. 71 b. 77 c. 61 d. 87



அறிவுக்கு ஏற்றது, மக்களுக்கு நன்மை பயப்பது,
மக்களின் அறிவை வளர்ச்சியடையச் செய்வது எதுவோ
அதைப் பற்றியே பேசு.

-தந்தை பெரியார்